# பயன்பாடா? பயனளிப்பா?

**ஆண்டவர், நமக்களித்த அருட்கொடைகளைப் பயன்படுத்தி, பெருக்காவிடில் அவற்றை இழந்து கொண்டிருக்கிறோம் என அறிந்து கொள்வோம்.**

**தரப்பட்ட திரவியங்கள் :** இயேசுவினுடைய உவமைகள் எளிமையானதாகவும், ஆனால் ஆழமான சத்தியத்தை வெளிக் கொணர்வதாகவும் உள்ளது. இந்த உவமையில் ஒரு பிரபு தனது பத்து ஊழியக்காரருக்கு பத்து இராத்தல் திரவியங்களைக் கொடுத்து வியாபாரம் பண்ணும்படி பணிக்கிறான். பத்து இராத்தல் என்பது மூன்று மாத ஊதியத்திற்குச் சமம். அந்தப் பிரபுவைப் போன்றே இயேசுவும் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு ஒரே விதமானப் பொறுப்பைத் தந்துள்ளார். நமக்குத் தரப் பட்டுள்ள மிகப் பிரதான கட்டளை சுவிசேஷத்தை அறிவிப்பதும், சீடராக்குவதும் (மத்.28:19,20) அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது நம் கடமை. சுவிசேஷம் என்பது நமக்கு மட்டுமாக வைத்துக் கொள்ளக் கூடிய பொக்கிஷம் அன்று, மற்றவர் களுக்கும் இரட்சிப்பைக் கூறி பரலோக இராஜ்ஜியத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். இழந்து போனதை மீட்க தம்முடைய இரத்தத்தைச் சிந்தின மாபெரும் அன்பை பறைச்சாற்றுகிறோமா? சாட்சியாய் வாழ்கிறோமா?

**பயன்படுத்தப்பட்ட திரவியங்கள் :** நாம் யாவரும் சுவிசேஷ தொழிலதிபர்கள். நமது அதிபதியின் பணியில் நாம் சுவிசேஷத்தை அறிவிப்பதில் பங்காளிகள். நமது கரங்களில் தரப்பட்டுள்ள மூலதனத்தை விரிவடையச் செய்ய வழிமுறைகளை நாம் வகுக்க வேண்டும். ஒரே சத்தியத்திற்காக முறைப்படி எல்லா இடங்களிலும் சூழ்நிலைகளிலும் எடுத்தியம்ப வேண்டும். சாதகமற்ற சூழ்நிலைகளையும், சுவிசேஷ தருணமாக மாற்ற வேண்டும். தேவ கிருபையுடன் நிறைவேற்ற வேண்டும். சுவிசேஷத்தின் வல்லமை மக்களை பரலோகத்திற்குப் பங்காளிகளாக மாற்றும்.

**சாக்குபோக்குகள் :** ஊழியக்காரர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் பெருக்கி ஆதாயத்துடன் திரும்ப தந்த போது, பிரபு அவர்களை மெச்சுகிறார். ஆனால் எந்த ஆதாயத்தையும் பெறாமல் சாக்குப் போக்குகளைச் சொன்ன ஊழியக்காரர் “பொல்லாத” ஊழியக்காரர் என அழைக்கப்படுகின்றனர். திரவியத்தைக் காசுக்கடை (வங்கி) யில் முதலீடு செய்திருந்தால் வட்டியுடன் கிடைக்குமே என ஆதங்கப்படுகிறார். நமக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளை பயன்படுத்த வேண்டும் என ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

**வெகுமதிகள் :** வெகுமதிகளை அளிப்பதற்காக வாஞ்சையோடு பிரபு திரும்ப வந்தார். முதல் ஊழியக்காரனைப் புகழ்ந்து வெகுமதி அளித்தார். இரண்டாவது ஊழியக் காரனுக்கு வெகுமதி மட்டும் புகழாரம் சூட்டப்படவில்லை. மூன்றாவது மனிதனிட மிருந்தோ அனைத்து பொறுப்புக்களும் எடுக்கப்பட்டு, அவனது வார்த்தைகளினாலே நியாயம் தீர்க்கப்பட்டான். வெகுமதிக்குத் தகுதியுடையவர்களாக காணப்படுவோமா?

***ஆண்டவரே, தரப்பட்ட திரவியங்களை முறையாக உமது சுவிசேஷம் பரவுவதற்குப் பயன்படுத்த உதவி புரியும். ஆமென்.***

ஓராண்டில் வேதம் : உபாகமம் 23, 24 | ரோமர் 5